தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள். 01.09.2026**

**முன்னிலை**

## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 8624/F/2025**

திரு.பொ.கோவிந்தராஜ், -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம், -- பொது அதிகார அமைப்பு
ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி மாவட்டம்-635 307.

******

**இறுதிஆணை**

இவ்வாணையம் 27.05.2026 அன்று பிறப்பித்த உத்தரவினை தொடர்ந்து பொது அதிகார அமைப்பின் சார்பாக அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர் திரு.ஆர்.திருமால் வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், கிருஷ்ணகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் 01.07.2026 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர் தனது எழுத்துமூல விளக்கத்தில், கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளராக பணிபுரியும் தான், இதற்கு முன்பு 15.03.2024 முதல் 24.03.2025 வரை ஊத்தங்கரை வட்டாட்சியராக பணிபுரிந்ததாகவும், அப்போது நடுப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த பி.கோவிந்தராஜ் என்பவர் நடுப்பட்டி கிராம புல எண்.6, 7, 8, 9 ஆகிய அரசு புறம்போக்கு நிலங்களில் பட்டா வழங்கப்பட்ட விவரம் மற்றும் 1975 முதல் 2005 வரை உள்ள காலத்திற்கு யார் யாருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்ற விவரங்களை கோரி பொதுத்தகவல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்)

கிருஷ்ணகிரி அவர்களுக்கு மனுதாரர் மனு செய்ததாகவும், மேற்படி தகவல்கள் கிடைக்கப்பெறாததால் 03.10.2024 அன்று தகவல் அறியும் உரிமைச் சட்ட அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி என்ற முகவரிக்கு மேல்முறையீட்டு மனு செய்துள்ளதாகவும், மேற்படி மேல்முறையீட்டு மனுவானது தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றம் செய்யப்பட்டு பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர் ஊத்தங்கரை அவர்களுக்கு 26.11.2025 அன்று கிடைக்கப் பெற்றுள்ளது என்றும், மேற்படி மனுதாரருக்கு 23.12.2025 அன்று பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர் அவர்களால் தகவல் அளிக்கப்பட்டுள்ளதாகவும், முன்னால் மேல்முறையீட்டு அலுவலர்/ வட்டாட்சியர் ஊத்தங்கரை என்ற பெயரில் தான் 24.03.2025 வரை மட்டுமே பணிபுரிந்து வந்துள்ளதாகவும், அதன் பின்னர் 25.03.2025 முதல் தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நி.எ), கிருஷ்ணகிரி அலுவலகத்திற்கு மாற்றப்பட்டு பணியில் சேர்ந்ததாகவும், மனுதாரரின் மேல்முறையீட்டு மனுவானது வட்டாட்சியர் ஊத்தங்கரை அலுவலகத்தில் கிடைக்கப்பெற்ற நாளில் தான் மேற்கண்ட அலுவலகத்தில் மேல்முறையீட்டு அலுவலர்/ வட்டாட்சியராக பொறுப்பில் இல்லை என்றும், தான் தனது பணிக்காலத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட அனைத்து மனுக்களுக்கும் உரிய காலத்திற்குள் முறையாக பதில் அளித்தும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் விதிமுறைகளை முறையாகவும் கடைபிடித்தும் வந்துள்ளதாகவும் தெரிவித்து, இனி வரும் காலங்களிலும் கடைபிடிப்பேன் என்றும் தெரிவித்து தனது எழுத்துமூல விளக்கத்தினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இதனை ஆணையம் பரிசீலனை செய்து ஏற்கிறது.

2. மேலும் அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உரிய காலத்திற்குள் (ஐந்து தினங்களுக்குள்) மாற்றம் செய்யாதது குறித்து விளக்கம் கோரப்பட்டது குறித்து எவ்வித விளக்கமும் ஆணையத்தின் முன் சமர்ப்பிக்கப்படவில்லை. இதனை ஆணையம் வன்மையாக கண்டிக்கிறது. இதனை தொடர்ந்து பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு.R.சர்வேந்திரன், வருவாய் உதவியாளர் (Firka), கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் 21.07.2026 அன்று நேரில் ஆஜராகி, அப்போதைய பொதுத் தகவல் அலுவலரின் எழுத்து மூல விளக்கத்தில் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, கீழான மனு தன்னால் பெறப்படவில்லை என்றும், மேற்படி மனுவினை பெற்ற இருக்கை உதவியாளர், மனுவை தனது கவனத்திற்கு கொண்டு வரப்படவில்லை என்றும், இத்தாமதம் வேண்டுமென்றோ, உள்நோக்கத்துடனோ, அல்லது தகவலை மறைக்கும் நோக்கத்துடனோ ஏற்பட்டதல்ல மாறாக, அக்காலகட்டத்தில் நிலவிய அதிகப்படியான அலுவல் பணிச்சுமை காரணமாகவே ஏற்பட்டதாகும் என்று தெரிவித்த அப்போதைய பொதுத் தகவல் அலுவலரின் எழுத்துமூல விளக்கத்தினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். அவ்விளக்கத்தினை ஆணையம் பரிசீலனை செய்கையில், அப்போதைய பொதுத் தகவல் அலுவலரின் எழுத்துமூல விளக்கத்தினை ஆணையம் ஏற்கவில்லை என்பதை ஆணையம் பதிவு செய்து பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினை பிறப்பிக்கின்றது:-

- **அப்போதைய பொதுத் தகவல் அலுவலரின் எழுத்துமூல விளக்கத்தில் மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனுவினை பெற்ற இருக்கை**

**உதவியாளர், மனுவை தனது கவனத்திற்கு கொண்டு வரவில்லை என தெரிவித்ததையடுத்து பொதுத் தகவல் அலுவலர், இருக்கை உதவியாளர் மீது நடவடிக்கை எடுத்து, அது குறித்த அறிக்கையினை ஆணையத்திற்கு தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் 01.09.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையத்தால் உத்தரவிடப்பட்டிருந்தது.**

மேற்குறிப்பிடப்பட்ட ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் திரு.A.பெரியசாமி, Deputy Inspector of Firka, கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் 01.09.2026 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, ந.க.20442/2026/அ2, நாள் 24.08.2026 தேதியிட்ட குறிப்பாணையின் வாயிலாக இருக்கை உதவியாளர் மீது நடவடிக்கை எடுத்த விவரத்தின் அறிக்கையினை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இதனை ஆணையம் பதிவு செய்து, இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

**<u>வழக்கு எண். SA 8624/F/2025</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி மாவட்டம்-635 307.

**அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் (28.08.2024 தேதிய)**
**மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்),**
**மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,**
**கிருஷ்ணகிரி மாவட்டம்.**

**(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)**

**அப்போதைய முதல் மேல்முறையீட்டு அலுவலர் (03.10.2024 தேதிய),**
**வட்டாட்சியர்,**
**வட்டாட்சியர் அலுவலகம்,**
**ஊத்தங்கரை வட்டம்,**
**கிருஷ்ணகிரி மாவட்டம்.**

**(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)**

**<u>மனுதாரர்</u>**

திரு.பொ.கோவிந்தராஜ்,
நடுப்பட்டி அஞ்சல்,
ஊத்தங்கரை வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்-635 307.

**<u>நகல்</u>**

மாவட்ட ஆட்சித் தலைவர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை-35.(For Followup).

Copy to: File NS/PA-